(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 2 (9).]

# பாராளுமன்றம்

## 2 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2011, பெப்புருவரி 24, வியாழக்கிழமை வெளியிடப்பட்டது

## 2011, மார்ச் 08, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0040/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கடந்த பத்து வருடங்களாக இலங்கை அரசாங்கத்திற்கு கடன் வழங்கிய நாடுகளின், சர்வதேச நிதி நிறுவனங்களின் அல்லது வங்கிகள் மற்றும் தனியார் துறையினர்களின் பெயர்களை வருடாந்த அடிப்படையிலும்,

(ii) இன்றுள்ளவாறாக இக்கடன்களின் மொத்த நிலுவைத் தொகையினையும்,

(iii) 1999 ஆம் ஆண்டின் இறுதியில் இருந்த கடன்களின் மொத்த நிலுவைத் தொகையினையும்,

(iv) 1999 இலிருந்து இற்றை வரையில் நாடுகளினால் அல்லது நிறுவனங்களினால் கடனாக வழங்கப்பட்ட தொகையினை வருடாந்த அடிப்படையிலும்,

(v) வட்டி வீதத்தினையும் திருப்பிச் செலுத்தும் கால அளவினையும்

அவர் இச் சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) 2000 ஆம் ஆண்டிலிருந்து 2015 வரையான காலப்பகுதியில் திருப்பிச்செலுத்த வேண்டிய மொத்தக் கடன் தொகையை (வட்டியும் முதலுமாக), இற்றைவரையில் எடுக்கப்பட்ட கடன்களுடனும் வருடாந்த அடிப்படையிலும்,

(ii) மேற்குறிப்பிட்ட தகவலினை யு.எஸ் டொலர்களிலும் விசேட மீள்பெறல் உரிமை அளவிலும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0216/ '10

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கொழும்பு மாவட்டத்தில் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு சொந்தமான காணிகள் உள்ளனவா என்பதையும்,

(ii) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு காணியினதும் பெயர், அளவு, அமைந்துள்ள கிராம சேவையாளர் பிரிவு, மற்றும் காணியின் இயல்பு யாதென்பதையும்,

(iii) மேற்படி ஒவ்வொரு காணியினதும் வருடாந்த வருமானம் எவ்வளவென்பதையும்,

(iv) மேற்படி காணிகளின் உரிமை சட்டபூர்வமாக ஆட்களுக்கு அல்லது நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(v) ஆமெனில், மேற்படி காணிகள் எவ்விடயத்திற்காக எவ்வடிப்படையில் கையளிக்கப்பட்டுள்ளது என்பதையும்,

(vi) காணிகளை பெற்றுக்கொண்ட ஆட்கள் அல்லது நிறுவனங்களின் பெயர், முகவரி, கையளிக்கப்பட்ட திகதி, காணியின் அளவு மற்றும் கால எல்லை யாதென்பதையும்,

(vii) ஒவ்வொரு காணியிலிருந்தும் ஆணைக்குழுவிற்கு கிடைக்கும் வருமானம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) ஆணைக்குழுவிற்கு சொந்தமான காணிகள் சட்டவிரோதமான முறையில் ஆட்கள் அல்லது நிறுவனங்களினால் அனுபவிக்கப்படுகின்றதா என்பதையும்,

(ii) ஆமெனில், இவர்களின் பெயர், அனுபவித்து வரும் காணியின் அளவு, மற்றும் காலஎல்லை யாதென்பதையும்,

(iii) இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை மற்றும் இதன் தற்போதைய நிலைமை யாதென்பதையும்,

(iv) ஆரம்பத்திலும் தற்போதும் ஆணைக்குழுவிற்கு சொந்தமான காணியின் அளவு எவ்வளவென்பதையும்,

(v) ஆரம்பத்தில் காணப்பட்ட காணியிலிருந்து கையளிக்கப்பட்ட காணியின் அளவு எவ்வளவென்பதையும்,

(vi) உரிமை கையளிக்கப்பட்டுள்ளவர்களின் பெயர், முகவரி மற்றும் காணியின் அளவு யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0293/ '10

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) 2006 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதற்கமைய, 9 மீற்றர் நீளமான 21000 மரத்தூண்களும் 10 மீற்றர் நீளமான 3400 மரத்ததூண்களும் கொள்வனவு செய்வதற்காக விலை கோரப்பட்டது என்பதையும்,

(ii) குறைந்தபட்ச விலைகளைச் சமர்ப்பித்த அரச மரக் கூட்டுத்தாபனத்தின் கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதையும்,

(iii) இரண்டாவதாக குறைந்தபட்ச விலைகளை சமர்ப்பித்த தென்னாபிரிக்க நிறுவனத்திற்கு கேள்விப் பத்திரம் அளிக்கப்பட்டதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) எவ்வாறாயினும், 9 மீற்றர் நீளமான 10500 மரத்தூண்களும் 10 மீற்றர் நீளமான 1700 மரத்தூண்களும் கொள்வனவு செய்யப்பட்டதென்பதையும்,

(ii) இதில் தென் மாகாணத்திற்கு விநியோகிக்கப்பட்ட 2363 தூண்களில் 73 தூண்கள் மட்டுமே பாவனைக்கு எடுக்கப்பட்டதென்பதையும்

அவர் அறிவாரா?

(இ) அரச மரக் கூட்டுத்தாபனத்திற்கு மேற்கூறிய கேள்விப் பத்திரத்தை அளிக்காமை யினால் ரூபா 79.5 மில்லியன் நட்டம் ஏற்பட்டதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) அந்த நட்டம் தொடர்பில் பொறுப்புக் கூறவேண்டியவர்களின் பெயர்கள் எவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0517/ '10

கௌரவ (திருமதி) ரோசி சேனாநாயக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இலங்கையில் போசாக்கு பற்றாக்குறையுள்ள சிறார்கள் இருக்கின்றார்கள் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இலங்கையில் தற்போதுள்ள போசாக்கின்மையினால் பாதிக்கப்பட்ட 05 வயதிற்குக் குறைந்த பிள்ளைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) வடக்கு கிழக்கில் போசாக்கின்மையினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) பிள்ளைகளின் போசாக்கினை மேம்படுத்துவதற்காக சுகாதார அமைச்சின் கீழ் நடைமுறையிலிருக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் எவை என்பதையும்,

(ii) அந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பயன் பெறுபவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0533/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிழக்கு மாகாணத்தின், சியம்பலான்டுவை - அம்பாறை - காரைதீவு வீதியானது அபிவிருத்தி செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளதொரு வீதியா என்பதையும்,

(ii) ஆமெனில், இவ்வீதி தற்போது அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றதா என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) இவ்வீதியில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்றுவருமாயின்,

(i) அதன் நீளம் எத்தனை கிலோ மீட்டர்கள் என்பதையும்,

(ii) இதன் பணிகளை முடிவுறுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாதென்பதையும்,

(iii) இதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வீதியின் நிர்மாணப் பணிகளுக்காக கேள்ளிப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில், கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) அந்தந்த நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப்பத்திர விலைகள் யாவையென்பதையும்,

(iv) கேள்விப் பத்திரம் ஒப்படைக்கப்பட்ட நிறுவனம் மற்றும் குறித்த கேள்விப் பத்திரத் தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) இவ்வீதியை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை உள்நாட்டு நிதியங்களிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(ii) இன்றேல் , வெளிநாட்டு உதவிகளிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(iii) வெளிநாட்டு உதவி பெறப்பட்டிருப்பின், உதவி வழங்கிய நாட்டின் பெயர் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0560/ '10

கௌரவ (அல்ஹர்ஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்தின் சில்லறை களஞ்சியங்கள் 24 மணி நேரமும் திறந்து வைக்கப்பட்டிருந்த காலக்கட்டத்தில் மேற்படி நிறுவனத்திற்குப் பொறுப்பாக செயலாற்றிய அமைச்சர் யாரென்பதையும்,

(ii) மேற்படி அமைச்சரின் பிரத்தியேக பணியாட்டொகுதிக்கான சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர் களின் எண்ணிக்கை மற்றும் பதவிப் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி பதவிகளை வகித்த உத்தியோகத்தர்களின் பெயர்கள் முகவரிகள், பெற்றுக்கொண்ட சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் வெவ்வேறாக யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி அமைச்சர் பதவி வகித்த காலகட்டத்தில் இவரது பணியாட்டொகுதிக்கு மேற்படி அமைச்சிலிருந்து, அரசாங்க கூட்டுத்தபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளிலிருந்து, கூ. மொ. வி. நி. போன்ற இணைந்த கம்பனிகளிலிருந்து இணைக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இவர்களது பெயர்கள், முகவரிகள், வகித்த பதவிகள், சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள், பெற்ற ஏனைய சலுகைகள் வெவ்வேறாக யாவையென்பதையும்,

(iii) மேற்படி உத்தியோகத்தர்கள் அமைச்சின் பணியாட்டொகுதிக்கு இணைக்கப் படுவதற்கு முன்னர் சேவையாற்றிய நிறுவனங்கள் மற்றும் வகித்த பதவிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0569/ '10

கௌரவ அஜித் பி. பெரேரா,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) களுத்துறை மாவட்டத்தில் ஒவ்வொரு பிரதேச செயலாளர் அதிகாரப் பிரதேசத்திலும் 2008, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் டெங்கு நோயினால் பீடிக்கப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கை மற்றும் டெங்கு நோயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) களுத்துறை மாவட்டத்தில் டெங்கு நோய் தீவிரமாக பரவும் அபாயத்திற்கு முகங்கொடுத்துள்ள பிரதேசங்கள் எவை என்பதையும்,

(ii) அந்தப் பிரதேசங்களில் டெங்கு நோயைத் தடுக்க இதுவரை எடுக்கப்பட்டுள்ள விசேட நடவடிக்கைகள் எவை என்பதையும்,

(iii) இதற்காக எதிர்வரும் நாட்களில் எடுக்கப்படவிருக்கும் விசேட நடவடிக்கைகள் எவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0834/ '10

கௌரவ அக்கில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(ஆ) ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில் பெறுகின்ற புள்ளிகளுக்கிணங்க தரம் 6 இல் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்ற முதல் 50 பாடசாலைகளில், 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட புலமைப்பரிசில் பரீட்சைகளில் சித்தியெய்திய மாணவர்களுக்காக 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளுக்காக ஒதுக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி அனைத்துப் பாடசாலைகளிலும் அல்லது ஒருசில பாடசாலைகளில் 2009 ஆம் ஆண்டில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்காக 2010 ஆம் ஆண்டில் தரம் 6 இல் ஒதுக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் பார்க்கிலும், 2010ஆம் ஆண்டில் சித்தியடைந்த மாணவர்களுக்காக 2011 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறு குறைவடைந்திருப்பின் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்,

(iii) தரம் 6 இன் வெற்றிடங்களின் எண்ணிக்கை குறைவடைந்திருப்பின், குறைந்தபட்சம் 2010 இல் ஒதுக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கையை 2011 ஆம் ஆண்டிலும் ஒதுக்கிக் கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(iv) இலவசக் கல்விக் கொள்கையை உறுதிப்படுத்துவதற்காக புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்காக நாட்டின் பிரபல்யமான பாடசாலைகளில் ஒதுக்கப்படுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கையை வருங்காலத்தில் குறைக்காமல் பேணிவர மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0998/ '10

கௌரவ காமினி ஜயவிக்ரம பெரேரா,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010/2011 ஆம் ஆண்டுகளில் வடக்கு, கிழக்கு மாகாண விவசாயிகளின் விதை நெல் தேவையினை பூர்த்தி செய்வதற்காக ஒவ்வொரு விவசாயிக்கும் 3 புசல் விதை நெல் வீதம் வழங்கி உலக உணவு அமைப்பு நதி வசதிகளை செய்து கொடுத்துள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்தப் பணத்தொகை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி விவசாயிகளுக்கு விதை நெல் வழங்குவதற்காக இதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி விதை நெல் வழங்குவதற்குத் தேவையான விதை நெல் கொள்வனவு செய்யப்பட்டிருப்பது உத்தரவாதமளிக்கப்பட்ட விதை நெல் உற்பத்தி கமநல அமைப்புகளிடமிருந்தா என்பதையும்,

(ii) விதை நெல் கொள்வனவு செய்யும் போது ஒரு புசலுக்கு செலுத்தப்பட்ட விலை என்னவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0095/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) 2010.05.01ஆம் திகதியிலிருந்து 2010.07.01 ஆம் திகதி வரை அமைச்சரவை அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் ஆகியோருக்குச் செலுத்தப்பட்ட தொகைகள் யாவையென்பதையும்,

(ii) அமைச்சர்களும் அவர்களது ஆளணியினரும் அனுபவித்துவரும் பிற சலுகைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0518/ '10

கௌரவ (திருமதி) ரோசி சேனாநாயக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையிலுள்ள கர்ப்பிணித் தாய்மார், பாலூட்டும் தாய்மாரில் இரும்புச் சத்து குறைபாடு உடையவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) அவர்களின் போசாக்கை உயர்த்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்,

(iii) இலங்கையில் குறை நிறையுடன் பிறக்கின்ற குழந்தைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iv) 5 வயதுக்கு குறைந்த குழந்தைகளில் இரும்புச் சத்து குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தொடர்பில் மேற்கூறப்பட்ட (i), (iii), (iv) இற்கு உரியதான புள்ளிவிபரங்கள் யாவை என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0541/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கிழக்கு மாகாணத்தின், அல்லை – கந்தளாய் வீதியானது அபிவிருத்தி செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளதொரு வீதியா என்பதையும்,

(ii) ஆமெனில், இவ்வீதி தற்போது அபிவிருத்தி செய்யப்படடு வருகின்றதா என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) இவ்வீதியில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்றுவருமாயின்,

(i) அதன் நீளம் எத்தனை கிலோ மீட்டர்கள் என்பதையும்,

(ii) இதன் பணிகளை முடிவுறுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாது என்பதையும்,

(iii) இதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வீதியின் நிர்மாணப் பணிகளுக்காக கேள்ளிப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில், கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்,

(iii) அந்தந்த நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப் பத்திர விலைகள் யாவையென்பதையும்,

(iv) கேள்விப் பத்திரம் ஒப்படைக்கப்பட்ட நிறுவனம் மற்றும் குறித்த கேள்விப் பத்திரத் தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) இவ்வீதியை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை உள்நாட்டு நிதியங்களிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(ii) இன்றேல், வெளிநாட்டு உதவிகளிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(iii) வெளிநாட்டு உதவி பெறப்பட்டிருப்பின், உதவி வழங்கிய நாட்டின் பெயர் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0637/ '10

கௌரவ (அல் ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— மரபார்ந்த கைத்தொழில்கள், சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2009 ஆம் ஆண்டின் இறுதியின் போது தேசிய கைவினை மன்றத்தின் கீழ் பதிவு செய்திருந்த பல்வேறு கைப்பணி கைத்தொழில் துறைகளில் ஈடுபட்டுள்ளொரின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) இந்நாட்டு கைப்பணிக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளோர் எதிர்கொள்ளும் மூலப்பொருட்களை திரட்டிக் கொள்வதிலும் சிரமத்திற்குப் பிரகாரமாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கைப்பணிக் கைத்தொழிலைச் சேர்ந்த கைவினைஞர்கள் வசமுள்ள அறிவைப் பாதுகாப்பதற்கும் எதிர்கால சந்ததியினருக்கு அதனை உரித்தாக்குவதற்கும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஏதேனுமொரு வேலைத்திட்டமொன்று உண்டா என்பதையும்,

(ii) ஆமெனில், அது யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0546/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டிருந்த அறுகம்பை பாலத்தின் நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளனவா என்பதையும்,

(ii) இன்றேல், அதன் தற்போதைய நிலை யாதென்பதையும்,

(iii) மேற்படி பாலத்தை நிர்மாணிப்பதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iv) இன்றளவில் செலவிடப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி பாலத்தை நிர்மாணிப்பதற்கான நிதியை முதலீடு செய்துள்ள நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்,

(ii) இதற்கு வெளிநாட்டு உதவி கிடைத்திருப்பின், உதவி வழங்கிய நாடு மற்றும் வழங்கிய தொகை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி பாலத்தின் நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்,

(ii) அந்த நிறுவனத்திற்கு எந்த அடிப்படையில் நிர்மாணப் பணிகள் ஒப்படைக்கப்பட்டனவென்பதையும்,

(iii) நிர்மாணப் பணிகளை ஒப்படைப்பதற்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவாவென்பதையும்,

(iv) அவ்வாறாயின், கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட விலைகள் தனித்தனியாக யாவையென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0600/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுத் துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் நடைபெறவிருக்கும் உலகக் கிண்ண கிரிக்கட் போட்டிகளையும்,

(ii) இலங்கையில் உலகக் கிண்ணப் போட்டியை நடாத்துவதில் எதிர்பார்க்கப்படும் செலவினம் எவ்வளவு என்பதையும்,

(iii) இதன் மூலம் எவ்வாறு வருமானம் ஈட்ட எதிர்பார்க்கப்படுகின்றது என்பதையும்,

(iv) எதிர்பார்க்கப்படும் பார்வையாளர் எண்ணிக்கையையும்,

(v) அவர்களில் வெளிநாட்டவர் எண்ணிக்கை என்னவென்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது இலங்கையில் உள்ள சர்வதேச கிரிக்கட் மைதானங்களின் எண்ணிக்கையையும்,

(ii) அம்மைதானங்களை பேணுவதற்கான மாதாந்த செலவினத்தையும்,

(iii) உலகக் கிண்ண கிரிக்கட் பந்தயத்திற்காக அமைக்கப்பட்ட புதிய மைதானங்களின் பெயர்களையும்,

(iv) அவ் ஒவ்வொரு துடுப்பாட்ட மைதானத்தையும் அமைப்பதற்கான செலவினத்தை தனித்தனியாகவும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், என்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2010, செத்தெம்பர் மாதம் 20 ஆம் திகதிய 1672/1 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2011.02.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2010, ஒற்றோபர் மாதம் 29 ஆம் திகதிய 1677/35 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2011.02.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2010, திசெம்பர் மாதம் 09 ஆம் திகதிய 1683/22 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2011.02.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 2011.02.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கிழான இறக்குமதிகள் தீர்வைகள் சம்பந்தமான தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2010 நவெம்பர் 22 ஆம் திகதிய 1681/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சர்,— நெற் சந்தைப்படுத்தல் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1971 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, நெற் சந்தைப்படுத்தற் சட்டத்தின் 10 ஆம் பிரிவு மற்றும் 4 ஆம் பிரிவின் (6) ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் 62 ஆம் பிரிவின் கீழ் கூட்டுறவுகள் மற்றும் உள்நாட்டு வியாபாரத்துறை அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2010, திசெம்பர் 18 ஆம் திகதிய 1684/54 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

## 2011, மார்ச் 09, புதன்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

0315/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கொழும்பில் 'ஐபா' நிகழ்ச்சியினை நடத்துவதற்கு இலங்கை இணங்கிய திகதியினையும்,

(ii) நிகழ்விற்கு நிதி வழங்கிய தரப்பினையும்,

(iii) பணம் பெறப்பட்ட திகதியினையும்,

(iv) மேலேயுள்ளவாறு பணம் செலுத்தப்படாவிட்டால், செலவினை ஏற்றுக் கொண்டவர் யார் என்பதனையும்,

(v) நிகழ்ச்சிக்கான மொத்தச் செலவினையும்

அவர் இச்சபைக்கு அறியத் தருவாரா?

(ஆ) (i) 'ஐபா' நிகழ்ச்சியினால் கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்ட நன்மைகளையும்,

(ii) அவ்வாறான நன்மைகள் கிடைத்ததா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0410/ '10

கௌரவ திலும் அமுனுகம,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2004 ஆம் ஆண்டில் அரச சேவையிலிருந்த ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) 2010 ஆண்டில் அரச சேவையிலுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) 2004 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலும் இந்த ஊழியர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்,

(ii) இவ்வாறு அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0529/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கிழக்கு மாகாணத்தின், திருக்கொண்டுயாடுமடு - ஜயந்திபுர வீதியானது அபிவிருத்தி செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளதொரு வீதியா என்பதையும்,

(ii) ஆமெனில், இவ்வீதி தற்போது அபிவிருத்தி செய்யப்படடு வருகின்றதா என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) இவ்வீதியில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்றுவருமாயின்,

(i) அதன் நீளம் எத்தனை கிலோ மீட்டர்கள் என்பதையும்,

(ii) இதன் பணிகளை முடிவுறுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாது என்பதையும்,

(iii) இதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வீதியின் நிர்மாணப் பணிகளுக்காக கேள்ளிப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில், கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்,

(iii) அந்தந்த நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப்பத்திர விலைகள் யாவையென்பதையும்,

(iv) கேள்விப் பத்திரம் ஒப்படைக்கப்பட்ட நிறுவனம் மற்றும் குறித்த கேள்விப் பத்திரத் தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) இவ்வீதியை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை உள்நாட்டு நிதியங்களிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(ii) இன்றேல், வெளிநாட்டு உதவிகளிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(iii) வெளிநாட்டு உதவி பெறப்பட்டிருப்பின், உதவி வழங்கிய நாட்டின் பெயர் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0545/ '10

கௌரவ சாந்த பண்டார,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) 1948 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையிலான காலப்பகுதியினுள் இலங்கை விளையாட்டு வீரர்கள் ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொண்டார்கள் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொண்ட அந்த விளையாட்டு வீரர்களின் பெயர் பட்டியல் மற்றும் அந்த வீரர்கள் பெற்றுக்கொண்ட வெற்றிகள், அதனுடன் தொடர்பான வருடங்கள் என்பவற்றை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) எதிர்வரும் ஒலிம்பிக் போட்டி நடைபெறும் இடம் மற்றும் வருடம் யாதென்பதையும்,

(ii) அந்தப் போட்டிகளில் இலங்கையின் விளையாட்டு வீரர்கள் கலந்து கொள்கிறார்களா என்பதையும்,

(iii) அதன் பொருட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள செயற்திட்டம் என்ன என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0624/ '10

கௌரவ ஆர். யோகராஜன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கொழும்பு 12, ஹுசைனியா வீதி, இலக்கம் 45 இல் அமைந்துள்ள ஹமீட் அல் ஹுசைனியா கல்லூரியில் கடும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாடசாலையில் அங்கீகரிக்கப்பட்ட சிங்கள, தமிழ் மொழி மூல ஆசிரிய ஆளணியை பாடவாரியாகவும்,

(ii) ஒவ்வொரு மொழி மூலத்திலும் பாடரீதியாக தற்போதுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கையையும்,

(iii) ஒவ்வொரு மொழி மூலத்திலும் பாடரீதியாக தற்போது காணப்படுகின்ற ஆசிரியர் பற்றாக்குறை எவ்வளவு என்பதையும்,

(iv) மேற்படி ஆசிரியர் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்படவிருக்கும் நடவடிக்கையையும்,

(v) அந்நடவடிக்கைகள் எப்போது மேற்கொள்ளப்படுமென்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) ரோயல், ஆனந்த மற்றும் நாளந்த ஆகிய கல்லூரிகளில் மேலதிகமாக ஆசிரியர்கள் உள்ளனர் என்பதை அவர் அறிவாரா?

(ஈ) (i) மேற்படி (இ) பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலைகளில் மேலதிகமாக காணப்படுகின்ற ஆசிரியர்களது எண்ணிக்கையை போதனா மொழி ரீதியாகவும் பாடவாரியாகவும் யாதென்பதையும்,

(ii) ஹமீட் அல் ஹுசைனியா கல்லூரியில் தற்போது நிலவுகின்ற ஆசிரியர் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்காக மேலதிக ஆசிரியர்களை இப்பாடசாலைக்கு இடமாற்றம் செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0642/ '10

கௌரவ அஜித் குமார,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இவ்வாண்டினுள் தொழில்கள் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படும் வேலையற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அதற்கான விளம்பரங்கள் வெளியிடப்பட்டு நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டுள்ளனவா என்பதையும்,

(iii) மேற்படி ஆட்சேர்ப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும் மற்றும் நிறைவு செய்யப்படும் திகதிகள் யாவையென்பதையும்,

(iv) மேற்படி தொழில்கள் வழங்கும் வேலைத்திட்டத்திற்காக வரவு செலவுத் திட்ட மதிப்பீடு மூலம் ஒதுக்கீடு செய்வதற்கு எதிர்பார்க்கும் நிதி எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0708/ '10

கௌரவ துனேஷ் கங்கந்த,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2005 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஒகத்து மாதம் வரையிலான காலப்பகுதியில் கொரிய அரசினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புகளின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடத்திற்கும் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி தொழில் வாய்ப்பை பெற்றுக்கொள்வதற்கு நபரொருவர் பின்பற்ற வேண்டிய செயல் நடைமுறைகள் யாவையென்பதையும்,

(iii) அத்தொழில்களுக்காக சென்ற ஆட்களின் எண்ணிக்கை மாவட்ட மட்டத்தில் வெவ்வோறக எவ்வளவென்பதையும்,

(iv) கொரிய தொழில் வாய்ப்புக்காக இருக்க வேண்டிய அடிப்படை தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டு ஏற்கனவே வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடத்திற்கும் ஏற்ப வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்துகொண்டுள்ள கொரிய தொழில்வாய்ப்பு விண்ணப்பதாரி ஒருவரின் பதிவு செல்லுபடியாகும் கால எல்லை யாதென்பதையும்,

(ii) மேற்படி பதிவு இரத்தான தொழில் வாய்ப்பு விண்ணப்பதாரி ஒருவர் கொரியாவில் தொழிலொன்றை பெற்றுக்கொள்வதற்காக மீண்டும் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் யாவையென்பதையும்,

(iii) எதிர்காலத்தில் இதற்காக ஆட்களை தெரிவு செய்யும் போது ஏற்கனவே வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள தொழில் வாய்ப்பு விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0731/ '10

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் III ஆம் வகுப்பு, IIஆம் தரத்திற்கான, வரி உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை, 2006 ஆம் ஆண்டில் நடைபெற்றது என்பதையும்,

(ii) மேற்படி பரீட்சைக்குத் தோற்றிய 16,000 விண்ணப்பதாரிகளில் ஏறத்தாழ 1,000 போர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டனர் என்பதையும்,

(iii) இவர்களில் 550 பேருக்கு, 2007 ஆம் ஆண்டு ஏப்பிரல் 01 ஆம் திகதி தொடக்கம் நியமனம் வழங்கப்பட்டது என்பதையும்,

(iv) மேற்படி நியமனம் பெற்றவர்களிடையே, இப்பரீட்சை தொடர்பாக, 2006 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று பட்டப்படிப்புச் சான்றிதழைக் கொண்டிராதவர்களும் உள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) வரி உத்தியோகத்தர்களுக்காக நியமனம் பெற்ற மேற்படி ஒவ்வொரு வேட்பாளரினதும் பெயர், விலாசம் மற்றும் பெற்ற புள்ளிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்,

(ii) 2006.12.08 ஆம் திகதி முற்பகல் 9.30 க்கு, நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய, ஜா - எல கிழக்கு, துடல்ல, 76/சீ எனும் இலக்கத்தில் வசிக்கும், திருமதி டபிள்யு.ஏ.எஸ்.எம். சொவிஸ் இப்பரீட்சையிலும் நேர்முகப் பரீட்சையிலும் பெற்றுக்கொண்ட புள்ளிகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0780/ '10

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தற்போது வெளிநாடுகளில் பணிபுரியும் திருமணமான இலங்கைப் பெண்களுடைய இந்நாட்டிலுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இப்பிள்ளைகளின் பாதுகாப்பு மற்றும் நலனோம்புகைக்காக அரசு நடைமுறைப்படுத்தியுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் யாவையென்பதையும்,

(iii) அத்தகைய நிகழ்ச்சித் திட்டங்களுக்கு, அரசாங்கம் ஒருவருடத்திற்கு செலவு செய்யும் பணத்தொகை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0317/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மின்சார சபைக்கு செலுத்த வேண்டியதாக உள்ள மொத்த தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) இலங்கை மின்சார சபைக்கான பத்து பெரிய கடன்பட்டோரின் பெயர்களையும்,

(iii) உயர்ந்த கடன் காரணமாக CEB ஆல் பெறப்பட்ட கடன்களுக்காக செலுத்த வேண்டிய வட்டியையும்,

(iv) இந்த நிலைமையை சமாளிப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கையையும்,

(v) கடன் கொடுத்தோருக்கு இலங்கை மின்சாரசபை செலுத்தவேண்டியுள்ள தொகையையும்,

(vi) இலங்கை மின்சார சபையின் மிகப்பெரிய கடன் கொடுத்தோர் பத்து பேரின் பெயர்களையும்,

(vii) கடந்த ஆறு வருடங்களாக அப்பணம் செலுத்தப்பட வேண்டிய திகதிகளையும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) இலங்கை மின்சாரசபையின் செயல்திறன் இன்மையும், அதன் உயர்ந்தளவு கடன்களுமே உயர்ந்த மின்கட்டணங்களுக்கும் எரிபொருள் விலைகளுக்குமான காரணங்களாகும் என்பது சரியானதா?

(இ) (i) இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் மீது ச.நா.நி இனால் பிரகடனப்படுத்தப்பட்ட நிபந்தனைகளையும்,

(ii) அந் நிபந்தனைகளை இலங்கை மின்சாரசபையும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் நிறைவேற்றப் போகின்றனவா என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0575/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தற்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசாங்கப் பாடசாலைகளில் சேவையாற்றுகின்ற தொண்டர் ஆசிரியர்களின் எண்ணிக்கை பாடசாலை வகைப்படுத்தலுக்கிணங்க தனித்தனியாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்குவதற்கான ஏதேனும் வேலைத்திட்டம் அமுலாக்கப்படுகின்றதா என்பதையும்,

(iii) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் இதற்காக பணம் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) கல்வியமைச்சின் சுற்றறிக்கை 2008/50 பகுதி 2 இன் (vi) வது பிரிவில் அடங்குகின்ற தொண்டர் ஆசிரியர்கள் இதுவரை நிரந்தர சேவையில் அமர்த்தப்படவில்லை என்பதை அவர் அறிவாரா?

(இ) ஆமெனில், இவர்களை சேவையில் நிரந்தரமாக்கல் சம்பந்தமாக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0781/ '10

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது கிழக்கு மாகாணத்தில் வசிக்கும் முப்படை, பொலிஸ், பொலிஸ் அதிரடிப்படை மற்றும் சிவில் பாதுகாப்பு சேவைகளில் ஈடுபட்டிருக்கையில் தமது கணவர்மாரை இழந்த பெண்களின் எண்ணிக்கை, மாவட்ட ரீதியில் வெவ்வேறாக யாதென்பதையும்,

(ii) மேற்படி விதவைப் பெண்களுக்காக அரசாங்கம் நடைமுறைப்படுத்தியுள்ள நலன்புரிச் சேவைகள் யாவையென்பதையும்,

(iii) அவர்களது பிள்ளைகள் தொடர்பில் அரசாங்கம் நடைமுறைப்படுத்தியுள்ள நலன்புரிச் சேவைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0379/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இன்று பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோருக்கு அனுமதிக்கப்பட்டுள்ள பொலிஸ் ஆளணியினர் அல்லது அமைச்சுப் பாதுகாப்புப் பிரிவு ஆளணியினர் ஆகியோரது எண்ணிக்கை என்னவென்பதை தனித்தனியாகவும்,

(ii) அமைச்சுப் பாதுகாப்புப் பிரிவினர் வேறுயாருக்காக பணிக்கமர்த்தப்பட்டுள்ளர் என்பதையும்,

(iii) அவ்வாறு அனுமதிக்கப்பட்ட ஆளணியினர் எண்ணிக்கை என்னவென்பதையும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) இற்றைவரை பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோர் தவிர்ந்த ஏனையவர்களுக்காக பணிக்கமர்த்தப்பட்டுள்ள அமைச்சுப் பாதுகாப்புப் பிரவினரின் பட்டியலொன்றை அவர் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) இன்று வரை பொலிஸ் அல்லது அமைச்சுப் பாதுகாப்புப் பிரிவினரின் பாதுகாப்பைப் பெற்றுக்கொள்கின்ற தோல்வியடைந்த அபேட்சகர்கள், தோல்வியடைந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரது பெயர்களையும்,

(ii) அவர்களுக்காக பணிக்கமர்த்தப்பட்டுள்ள ஆளணியினரின் எண்ணிக்கை மற்றும் அவர்கள் எங்கிருந்து பெறப்பட்டனர் என்பதையும்,

(iii) இவ்விதமான வேலைக்கமர்த்தலின் பொழுது பின்பற்றப்பட்ட நடைமுறை என்னவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) உயர்நீதிமன்ற, மேல்நீதிமன்ற, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ள பொலிஸ், நீதித்துறைப் பாதுகாப்புப் பிரிவு, அல்லது அமைச்சுப் பாதுகாப்பு பிரிவு ஆளணியினரின் எண்ணிக்கை என்னவென்பதையும் அவர் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0724/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் மாவட்டத்திலுள்ள சமுர்த்தி கடன் பெறுநர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இக்கடன் வழங்கப்பட்ட வட்டி வீதம் யாதென்பதையும்,

(iii) கடன் வழங்கும் போது கடைப்பிடிக்கப்படும் நடைமுறை யாதென்பதையும்,

(iv) இதுவரை மீட்கப்படவுள்ள கடன்தொகை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) சமுர்த்தி கடன் பெறுநர்களிடமிருந்து கடனை மீள் அறிவடும் போது உத்தியோகத்தர்கள் தான்தோன்றித்தனமாக செயலாற்றுகின்றனர் என்பதை அவர் அறிவாரா?

(இ) ஆமெனில், அது சம்பந்தமாக மேற்கொள்ளப்போகும் நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0782/ '10

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— சமூக சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிழக்கு மாகாணத்தில் வசிக்கும் பிறப்பிலேயே அங்கவீனர்களாகவும் பல்வேறு விபத்துகளாலும் நோய்களாலும் அங்கவீனர்களாகவும் ஆகியுள்ள ஆட்களின் எண்ணிக்கை மாவட்ட மட்டத்தில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(ii) மேற்படி அங்கவீனர்களுக்காக அரசினால் வழங்கப்படும் நிவாரணச் சேவைகள் யாவையென்பதையும்,

(iii) அப்பணிகளுக்காக அரசு வருடந்தோறும் செலவு செய்யும் பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?